# பாடு பாப்பா நீ
# பாடு பாப்பா
# காலை முதல் மாலை வரை
# பாடு பாப்பா

அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி


**வேதாத்திரி பதிப்பகம்**

(உலக சமுதாய சேவா சங்கத்துடன் இணைக்கப்பட்டது)

180, காந்திஜி சாலை

ஈரோடு - 638 001


## குழந்தைகளுக்கு




சின்ன வயது குழைந்தைகளே
சீக்கிரம் காலையில் எழுந்திருங்கள்!
அன்னை தந்தை இருவருக்கும்
அன்பாய் வணக்கம் செலுத்துங்கள்


RangaRakes tamilnavarasam.com



பல்லைத் துலக்கி முகங்கழுவி
பரமனை மனதில் நினையுங்கள்
எல்லையில்லா ஆனந்தம்
எழுந்திடும் உங்கள் இளம் நெஞ்சில்



உள்ளத்தன்பால் உருக்கமுடன்
உங்கள் ஆசான் போதித்த
பள்ளிக் கூட பாடத்தைப்
படிக்கவேண்டும் இருதடவை

RangaRakes
tamilnavarasam.com



வீட்டுக்கணக்கைப் போட்டுப் பின்
விடைகள் சரியா எனப்பாரீர்
நாட்டுக் குழைத்த நல்லோரின்
நினைவை என்றும் மறவோமே.



அம்மா கொடுக்கும் ஆகாரம்
அளவாய் உண்ணவேண்டும் அதை
சும்மா அதிகம் சாப்பிட்டால்
சுகத்தைக்கெடுக்கும் அறிந்திடுவோம்

RangaRakes
tamilnavarasam.com



நேரம் தள்ளிப் போகாமல்
நினைவாய்ப் பள்ளிக்கூடம் போய்
ஆரம்பிக்கும் முன்னாலே
அமர்ந்திட வேண்டும் இடத்தினிலே



ஊக்கத்தோடு படித்தோர்கள்
உயர்ந்தோரானார் பலர் அந்த
நோக்கத்தோடு கல்விதனை
நன்றாய் கற்றுத் தேர்ந்திடுவோம்



தினமும் மாலை வேளையிலே
திறமையாகப் பலர் கூடி
மனமும் உடலும் நலமடைய
மகிழ்ச்சியோடு ஆடிடுவோம்.



அந்திவேளை மேற்கு புறம்
ஆகாயத்தை பார்த்திடுவோம்
விந்தையாக மேகங்கள்
விதவித மாகத் தோன்றிடுமே



இரவுவேளை வானத்தில்
எங்கும் நட்சத்திரமயமே
பரவி மினுக்கு மினுக் கென்று
பார்க்க அழகாய் காட்சிதரும்.



நிலவு இருக்கும் இரவுகளை
நினைக்க நினைக்க ஆனந்தம்
உலவி மேகம் சில நாளில்
உள்ளக் களிப்பை விளைவிக்கும்



அம்மா அப்பா வளர்க்கின்றார்
ஆசான் படிப்பைதருகின்றார்
சும்மா வானம் பூமி இவை
சுகத்தைத் தருகின்றதெல்லோர்க்கும்



இறைநிலை என்ற பேராற்றல்
எங்கும் உளது நீக்கமற
மறைவாய் இருந்து அது ஆற்றும்
மாபெரும் செயலை நினைந்திடுவோம்


tamilnavarasam.com



உணவை உண்போம் நாள் தோறும்
உடலாய் அதனை மாற்றுவதார்?
கணமும் நம்மைப் பிரியாமல்
கருத்தாய் இருந்து ஊக்குவதார்?



உலகம் நிலவு சூரியன்கள்
உயிர்களனைத்தும் படைத்ததுயார்?
பலவும் ஒழுங்காய் முறைபிறழா?
பாங்கில் இயக்கி வருவது யார்?

RangaRakes
tamilnavarasam.com




அவரே தெய்வம் பேராற்றல்
அறிவைக் கொண்டே வணங்கிடுவோம்
எவரும் அவரின் அருளாலே
இன்பம் பெற்று வாழ்கின்றார்.

## இறைவணக்கம்

எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவுமவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம்நீ
அவனில்தான்நீ, உன்னில் அவன்
அவன்யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால்நீ சிறியோன்
அவனை அறிந்தால்நீ பெரியோன்
அவன்நீ ஒன்றாய் அறிந்தஇடம்
அறிவு முழுமை அதுமுக்தி.

## மலர்வழியே விளங்கும் மறைபொருள் !

மலரே மலரே நீயார் உன்
மணமும் அழகும் வண்ணமும் என்
பலவாரான நினைவகற்றிப்
பார்க்க உன்னில் ஆழ்ந்து விட்டேன்

இயற்கை அழகை ரசிக்கும் உன்
எண்ணம் மிகமிக உயர்ந்துளது
செயற்கை மயக்கம் தெளிந்தறிவு
செம்மை பெறஎன் கதை சொல்வேன்.

மலரே! நீயார் எனக் கேட்டாய்
மறை பொருளான தெய்வமே நான்
சிலரே அறிவார் இவ்வுண்மை
சிந்தனை செய்ய வல்லவர்கள்.

பரம அணுக்கள் பல கோடி
பண்பாய்க் கூடி ஒரு கூத்து
கரம் கோர்த்தாடும் நாடகத்தோர்
கட்டம் எந்தத் தோற்றமும் ஆம்.

இறைவன் என்ற ஆதிபரம்
எடுத்த பலப்பல கோடி உரு
நிறைந்த பெரிய மண்டலமே
நெடிய விரிந்த பேரண்டம்.

பெரிய இயக்க மண்டலமே
பிரபஞ்சம் எனும் மேடையிலே
அரிய உருவ அழகோடு
ஆடுகின்றேன் நான் அவன்கதையாய்.

ஆதியின் அசைவே பரம அணு
அவை ஒவ்வோர் அளவில் கூட
வேதம் கூறும் ஐம்பூதம்
விண்முதல் மண்வரை வேறில்லை.

ஒவ்வொரு பொருளும் பரமுதலாய
அவ்வுருவரையில் வந்த கதை
செவ்விய சிறு சொல் பரிணாமம்
சிறப்பை உணர்வாய் நீயுமதே.

என்னைக் கண்ணால் பார்மலராய்
எனதமைப் புணர் அணுக்கூட்டே
முன்னம் பரமே அணுவாச்சு
மூலம் சிவமயம் பிரம்மமதே.

உருவம் மலர்தான் உட்பொருளை
உணர விண்ணெனும் நுண்ணணுவே
அருவம் ஆதி அசைந்த நிலை
அணுமுதல் அகண்ட பேரண்டம்

உன்னை யாரென்றேன் மலரே
உணர்த்தி விட்டாய் உண்மைப்பொருள்
பின்னை இந்தப் .பேரறிவில்
பிறழாதிருப்பேன் விழிப்புடனே.

ஆறறிவாக வாழ் மனிதர்
அதற்கு ஏற்ப பொருத்தமுள
பேறு உண்மைப் பொருளுணர்தல்
பிறவிப் பயனைப் பெற்றுவிட்டேன்